Coimbatore District Common II Revision Test 2014-15

**12** இரண்டாம் திருப்புத் தேர்வு - 2015 பதிவு எண் | | | | | | | |

## கணக்குப்பதிவியல்

நேரம் : 3.00 மணி மொத்த மதிப்பெண்கள் : 200

### பகுதி – அ

30 x 1 = 30

**கோடிட்ட இடம் நிரப்புக :**

1. அடக்க விலை அல்லது..............விலை, இதில் எது குறைவோ அந்தவிலையில் இறுதி சரக்கிருப்பு மதிப்பிடப்படும்.
2. முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் இருப்புநிலைக்குறிப்பின்..............பக்கத்தில் தோன்றும்.
3. நிலை அறிக்கைமுறை............முறை எனவும் அழைக்கப்படும்.
4. ............முறையில், ஆள்சார் மற்றும் ரொக்க கணக்குகள் மட்டுமே பராமரிக்கப்படும்.
5. குத்தகைகள் மீது தேய்மானம் கணக்கிட..............முறை பயன்படுத்தப்படும்.
6. அறைகலனின் விற்பனை விலை ரூ.50000, விற்றதில் ஏற்பட்ட இலாபம் ரூ.10000 எனில் இயந்திரத்தின் ஏட்டு மதிப்பு ரூ.................
7. விகிதங்கள்.............முன் கணிப்புக்கு உதவுகிறது.
8. நிகர இலாபத்திற்கும், விற்பனைக்கும் இடையேயான உறவே..............எனப்படுகிறது.
9. ரொக்கத்திட்டப்பட்டியல்...........என்றும் அழைக்கப்படுகிறது.
10. ............முதல் ஏற்பாட்டில் நடப்புக் கணக்குகள் தயாரிக்கப்படமாட்டாது.
11. நற்பெயர் ஒரு...........சொத்து.
12. பகிர்ந்து தரா லாபம் இருப்புநிலைக் குறிப்பின்............பக்கத்தில் தோன்றும்.
13. காப்பு முதல்.............போது மட்டும் வெளியிடப்படும்.
14. இரு அழைப்புகளுக்கிடையே இருக்கவேண்டிய கால இடைவெளி..............ஆகும்.
15. ஒரு தொழிலின் நிறுவன சொத்துக்கள் ரூ.90000 மற்றும் முதல் ரூ.75000. அந்நிறுவனத்தின் பொறுப்புகள் ரூ..........ஆகும்.

**சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**

16. உள் திருப்பம் கழிக்கப்படுவது அ) கொள்முதலிலிருந்து ஆ) விற்பனையிலிருந்து இ) வெளித்திருப்பத்திலிருந்து
17. கடன் விற்பனையை அறிய உதவும் கணக்கு
அ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு ஆ) மொத்த கடனாளிகள் கணக்கு இ) மொத்த கடனீந்தோர் கணக்கு
18. வியாபாரத்திலுள்ள முதலினை அறிய தயாரிக்கப்படுவது
அ) வியாபாரக் கணக்கு ஆ) இலாப நட்டக் கணக்கு இ) நிலை அறிக்கை
19. சொத்தின் அடக்கவிலை ரூ.10000, இறுதி மதிப்பு ரூ.1000, பயனளிப்பு காலம் 10 ஆண்டுகள். நேர்கோட்டு முறையில் தேய்மான விகிதம் அ) 11% ஆ) 10% இ) 9%
20. ஒரு நிறுவனத்தின் நடப்புச் சொத்துக்கள் ரூ.60000 மற்றும் நடப்புப் பொறுப்புகள் ரூ.30000 எனில் நடப்பு விகிதம்........
அ) 1 : 2 ஆ) 1 : 1 இ) 2 : 1
21. அனைத்து வகையுடைமை விகிதங்களும்........ஆல் கொடுக்கப்படும். அ) விகிதாச்சாரம் ஆ) மடங்கு இ) சதவீதம்
22. திட்டப்பட்டியல் வெளிப்படுத்தவது
அ) அலகுகளின் எண்ணிக்கை ஆ) பணம் இ) பணம் மற்றும் அலகுகளின் எண்ணிக்கை
23. நிலைமுதல் முறையில், கூட்டாளிகளின் இலாப நட்டங்கள் அவர்களின்..........கணக்கிற்கு மாற்றப்படுகிறது.
அ) முதல் ஆ) நடப்பு இ) எடுப்பு
24. புதிய கூட்டாளி சேர்க்கையில்............கணக்கிடப்படுகிறது.
அ) ஆதாய விகிதம் ஆ) முதல் விகிதம் இ) தியாக விகிதம்
25. வெளிச்செல்லும் கூட்டாளிக்கு சேரவேண்டிய தொகை உடனே செலுத்தப்படவில்லை எனில் அத்தொகை மாற்றப்படும் கணக்கு அ) முதல் கணக்கு ஆ) கடன் கணக்கு இ) ரொக்க கணக்கு
26. வெளியிடப்பட்ட பங்குகளின் எண்ணிக்கையை விடக் கூடுதலாக விண்ணப்பங்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டால் அதனை..........என்று அழைக்கலாம். அ) மிகை ஒப்பம் ஆ) குறை ஒப்பம் இ) முழு ஒப்பம்
27. அட்டவணை A–யின் படி, அழைப்பு நிலுவைக்கு கணக்கிடப்படும் வட்டி அ) 4% ஆ) 5% இ) 6%
28. பங்குகளை நிறுமம் ஒறுப்பிழப்பு செய்யும்போது அந்நிறுமத்தின் பங்கு முதல்...............
அ) அதே நிலையில் இருக்கும் ஆ) அதிகரிக்கும் இ) குறையும்
29. இருப்புநிலைக் குறிப்பில் முதலினக்காப்பு............பக்கம் தோன்றும்
அ) சொத்துக்கள் ஆ) பொறுப்புகள் இ) இரண்டிலும்
30. வெறுமையாதல் என்ற சொல் தொடர்புடையது.
அ) கண்ணுக்குப் புலனாகாச் சொத்துக்கள் ஆ) நிலைச் சொத்துக்கள் இ) இயற்கை கனிம வளங்கள்

### பகுதி – ஆ

10 x 5 = 50

**1) பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளி :**
**2) 50 வார்த்தைகள் மிகாமல் விடையளி**

31. கொடுபடவேண்டிய செலவுகள் என்றால் என்ன?
32. ஒற்றைப்பதிவு முறைக்கு வரைவிலக்கணம் தருக?
33. எறி மதிப்பு என்றால் என்ன?
34. நடப்பு விகிதம் பற்றி குறிப்பு தருக?
35. மாற்றுதல் முறை என்றால் என்ன?

36. ரொக்கச் செலுத்தல்களுக்கு ஐந்து உதாரணம் தருக?
37. ஆதாய விகிதம் என்றால் என்ன?
38. 31.3.2009 – நாளைய இருப்பாயவின் படி அறைகலன் ரூ.50000, சரிகட்டுதல் : அறைகலன் மீது 10% தேய்மானம நீக்குக. சரிக்கட்டுப்பதிவு மாற்றுப்பதிவு தருக.
39. விடுபட்ட தகவல் காண்க.

| | |
|---|---|
| இறுதிமுதல் | ரூ.160000 |
| கூடுதல் முதல் | ரூ.42000 |
| எடுப்பு | ரூ.25000 |
| தொடக்க முதல் | ரூ.120000 |

40. நேர்க்கோட்டு முறையில் தேய்மான விகிதம் காண்க?

| | |
|---|---|
| இயந்திரன் அடக்கவிலை | ரூ.230000 |
| நிறுவுவதற்கான செலவுகள் | ரூ.20000 |
| பயனளிப்பு காலம் | 10 ஆண்டுகள் |
| எறிமதிப்பு | ரூ.50000 |

41. நிலைச் சொத்துக்கள் விற்பனை விகிதம் கணக்கிடுக.

| | |
|---|---|
| நிலைச்சொத்தக்கள் | 3,00,000 |
| மொத்த விற்பனை | 8,50,000 |
| தேய்மானம் | 1,00,000 |
| விற்பனை திருப்பம் | 50,000 |

42. ஜனவரியில் தொடக்க இருப்பு ரூ.9000, அம்மாத பெறுதல் ரூ.14000, மற்றும் செலுத்தல் ரூ.10000, பிப்ரவரி மாத தொடக்க ரொக்க இருப்பு யாது?
43. X, Y என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 எனும் விகிதத்தில் இலாபநட்டம் பகிர்ந்து வந்தனர். அவர்கள் Z என்பவரை 1/3 கூட்டுக்கு இருவரும் சமமாக தியாகம் செய்து சேர்த்தனர். புதிய இலாபம் பகிர்வு விகிதம் கணக்கிடுக.
44. குமார் வரையறு நிறுமம் ரூ.100 வீதம் 20000 பங்குகளை 10ரூ தள்ளுபடியில் வெளியிட்டது. பதிவு தருக?

## பகுதி – இ

**1) ஐந்து வினாக்களுக்கு விடையளி.** **5 x 12 = 60**
**2) 45–வது வினா கட்டாயம் விடையளிக்க வேண்டும்.**

45. அ) 31.3.2008 இருப்பாய்வின்படி பற்பல கடனாளிகள் ரூ.1,25,000 சரிகட்டுதல் :
1) வாராகடன் ரூ.5000 போக்கெழுதுக 2) பற்பல கடனாளிகள் மீது 5% ஐயக்கடன் ஒதுக்கு உருவாக்குக.
3) கடனாளிகள் மீது 2% தள்ளுபடி ஒதுக்கு உருவாக்குக **(அல்லது)**
ஆ) திருமதி. வனிதா 1.4.2008 அன்று ரூ.240000 முதலுடன் தொழில் தொடங்கினார். அவர் தனது சொந்த உபயோகத்திற்காக மாதம் ரூ.2000 வீதம் எடுத்துக்கொண்டார். அவர் ரூ.40000 கூடுதல் முதல் இட்டார். 31.3.2009 அன்று அவருடைய நிலை பின்வருமாறு இருந்தது.

| | ரூ. |
|---|---|
| வங்கி இருப்பு (ப) | 16000 |
| சரக்கிருப்பு | 100000 |
| முதலீடுகள் | 60000 |
| பற்பல கடனாளிகள் | 100000 |
| அறைகலன் | 5000 |
| கைரொக்கம் | 4000 |
| பற்பல கடனீந்தோர் | 50000 |
| கொடுபடவேண்டிய செலவுகள் | 2000 |

அவர் தனது ஏடுகளை ஒற்றைப்பதிவ முறையில் வைத்துள்ளார். 2008–2009 ஆம் ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம் கண்டறிக.
46. தேய்மானம் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை?
47. ரொக்கத்திட்டப்பட்டியல் என்றால் என்ன? அதன் தன்மைகள் மற்றும் நன்மைகள் யாவை?
48. நிலை முதல் முறைக்கும், மாறுபடும் முதல் முறைக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
49. ஒரு ஆடை தயாரிப்பு நிறுவனம் 1.4.2005 அன்று ரூ.240000 மதிப்புள்ள இயந்திரம் வாங்கியது. மூன்று ஆண்டுகள் பயன்படுத்தப்பட்ட பிறகு அவ்வியந்திரம் ரூ.150000 க்கு விற்கப்பட்டது. 10% நேர்கோட்டு முறையில் தேய்மானம் நீக்கப்பட்டது. மார்ச் 31–ல் கணக்குகள் முடிக்கப்படுகின்றன.
இயந்திர கணக்கையும், தேய்மான கணக்கையும் 3 ஆண்டுகளுக்கு தயாரிக்க.
50. நடப்பு விகிதம், நீர்மை விகிதம், துல்லிய நீர்மை விகிதம் கணக்கிடுக.

| | ரூ. |
|---|---|
| ரொக்கம் | 16000 |
| கடனாளிகள் | 154000 |
| இறுதி சரக்கிருப்பு | 170000 |
| செலுத்தற்குரிய மா.சீட்டு | 30000 |
| கடனீந்தோர் | 120000 |
| கொடுபடவேண்டிய செலவுகள் | 10000 |
| வங்கிமேல் வரைபற்று | 10000 |

51. கீழ்காணும் விவரங்களில் இருந்து A, B எனும் கூட்டாளிகளின் முதல் கணக்குகள் மற்றும் நடப்புக் கணக்குகளை நிலை முதல் முறையில் தயாரிக்க.

| விவரம் | A | B |
|---|---|---|
| ரூ. | ரூ. | |
| 01.04.2004 –ல் முதல் | 90,000 | 60,000 |
| 2004–05 ல் எடுப்புகள் | 18,000 | 15,000 |
| எடுப்பு மீதான வட்டி | 500 | 300 |
| 2004–05 ல் இலாபப் பங்கு | 12000 | 8000 |
| முதல் மீதான வட்டி | 5400 | 3600 |
| கூட்டாளியின் ஊதியம் | 6000 | |

52. ஜெம் வரையறு நிறுமத்தின் இயக்குநர்கள் ஒன்று ரூ.10 மதிப்புடைய 2000 சாதாரண பங்குகள் மீது இறுதி அழைப்புத் தொகையான ரூ.2 செலுத்தாத காரணத்தால் ஒறுப்பிழப்பு செய்தனர். இப்பங்குகள் ரூ.15000 க்கு மறுவெளியீடு செய்யப்பட்டன.
தேவையான குறிப்பேட்டுப்பதிவுகளை தந்து ஒறுப்பிழப்பு மற்றும் முதலின காப்பிற்கான பேரேடுக் கணக்குகளை தயார் செய்க?

## பகுதி – ஈ

1) **எவையேனும் மூன்று வினாக்களுக்கு விடையளி.** **3 x 20 = 60**
**53–வது வினா கட்டாயம் விடையளிக்கவும்.**

53. 31.3.2008 திருமதி தேன்மொழியின் ஏடுகளிலிருந்த எடுக்கப்பட்ட இருப்புகள் கீழே தரப்பட்டுள்ளது.

| பற்று | ரூ. | வரவு | ரூ. |
|---|---|---|---|
| எடுப்புகள் | 40000 | முதல் | 200000 |
| கைரொக்கம் | 17000 | விற்பனை | 160000 |
| வங்கி ரொக்கம் | 65000 | பற்பல கடனீந்தோர் | 45000 |
| கூலி | 10000 | செலுத்தற்குரிய மாற்றுசீட்டு | 60000 |
| கொள்முதல் | 20000 | | |
| சரக்கிருப்பு 1.4.07 | 60000 | | |
| கட்டடம் | 100000 | | |
| பற்பல கடனாளிகள் | 44000 | | |
| பெறுதற்குரிய மாற்றுச்சீட்ட | 29000 | | |
| வாடகை | 4500 | | |
| கழிவு | 2500 | | |
| பொதுச் செலவுகள் | 8000 | | |
| அறைகலன் | 65000 | | |
| | 465000 | | 465000 |

சரிகட்டுதல் : 1) இறுதி சரக்கிருப்பு ரூ.50000 2) முதல் மீது வட்டி 6% 3) எடுப்பு மீது வட்டி 5%
4) கொடுபடவேண்டிய கூலி ரூ.1000 5) முன்கூட்டிச் செலுத்திய வாடகை ரூ.900
2008 மார்ச் 31 நாளைய இறுதி கணக்கு தயாரிக்க. **(அல்லது)**

ஆ) X, Y, Z என்ற கூட்டாளிகள் முறையே 3 : 2 ; 1 இலாப விகிதத்தில் பகிர்ந்து வந்தனர். 2010 டிசம்பர் 31ம் நாளைய இருப்பு நிலைக் குறிப்பு பின்வருமாறு.

| பொறுப்புகள் | | ரூ. | சொத்துக்கள் | ரூ. |
|---|---|---|---|---|
| பற்பல கடனீந்தோர் | | 30000 | கை ரொக்கம் | 3000 |
| செலுத்தற்குரிய மாற்றுசீட்டு | | 20000 | வங்கி ரொக்கம் | 35000 |
| இலாப நட்ட க/கு | | 30000 | பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு | 21000 |
| முதல் | | | கடனாளிகள் | 18000 |
| X – | 80000 | | சரக்கிருப்பு | 36000 |
| Y – | 50000 | | அறைகலன் | 7000 |
| Z – | 40000 | | பொறியும் பொறித்தொகுதியும் | 50000 |
| | | 170000 | கட்டடம் | 80000 |
| | | 250000 | | 250000 |

பின்வரும் பகிர்வுக்கு உட்பட்டு 2011 ஜனவரி 1 அன்று X என்பவர் கூட்டாண்மையிலிருந்து விலகினார்.
1) நற்பெயர் ரூ.30000 என்ற மதிப்பில் ஏடுகளில் தோற்றுவிப்பது.
2) சொத்துக்களின் மதிப்பு கீழ்கண்டவாறு மதிப்பிடப்பட்டன. சரக்கிருப்பு ரூ.30000, பொறியும் பொறித்தொகுதியும் ரூ.40000 கட்டடம் ரூ.100000. 3) ஐயக்கடன் ஒதுக்கு ரூ.1000 என உருவாக்குவது
4) X என்பவருக்கு சேரவேண்டிய தொகையில் ரூ.20000 உடனடியாகச் செலுத்தப்பட்டது. மீதித்தொகை அவர் கடன் கணக்குக்கு மாற்றப்பட்டது.
மறுமதிப்பீட்டு க/கு, முதல் க/கு மற்றும் புதிய கூட்டாண்மையின் இருப்புநிலைக் குறிப்பு ஆகியவை தயார் செய்க.

54. திரு. ராம் எனப்வர் ஒற்றைப்பதிவு முறையில் தன் ஏடுகளை வைத்துள்ளார். கீழ்கண்ட விவரங்களிலிருந்து 2014 மார்ச் 31 நாளோடு முடியும் ஆண்டுக்குரிய வியாபார இலாப நட்டக் கணக்கையும், அந்நாளைய இருப்புநிலைக் குறிப்பையும் தயார் செய்க.

| விவரம் | ரூ. 1.4.2013 | ரூ. 31.3.2014 |
|---|---|---|
| சரக்கிருப்பு | 50000 | 25000 |
| பற்பல கடனாளிகள் | 125000 | 175000 |
| அறைகலன் | 5000 | 5000 |
| ரொக்கம் | 12500 | 20000 |
| பற்பல கடனீந்தோர் | 75000 | 87500 |

| மற்ற விவரங்கள் | ரூ. |
|---|---|
| பெற்ற தள்ளுபடி | 7500 |
| அளித்த தள்ளுபடி | 5000 |
| பல்வகைச் செலவுகள் | 17500 |
| கடனீந்தோருக்கு அளித்த ரொக்கம் | 225000 |
| பற்பல கடனாளிகளிடம் பெற்ற ரொக்கம் | 267500 |
| எடுப்புகள் | 20000 |
| விற்பனைத் திருப்பம் | 7500 |
| கொள்முதல் திருப்பம் | 2500 |
| ரொக்க விற்பனை | 2500 |

55. 2013 மார்ச் 31 நாளோடு முடிவடையும் ஆண்டு அருணா நிறுமத்தின் வியாபார மற்றும் இலாப நட்ட கணக்கு :

| பற்று விவரம் | ரூ. | வரவு விவரம் | ரூ. |
|---|---|---|---|
| தொடக்க சரக்கிருப்பு | 1,99,000 | விற்பனை | 17,00,000 |
| கொள்முதல் | 11,19,000 | இறுதி சரக்கிருப்பு | 2,98,000 |
| மொத்த இலாபம் கீ/இ | 6,80,000 | | |
| | 19,98,000 | | 19,98,000 |
| நிர்வாகச் செலவுகள் | 2,60,000 | மொத்த இலாபம் கீ/கொ | 6,80,000 |
| விற்பனைச் செலவுகள் | 80,000 | வட்டி | 18,000 |
| நிதிசார் செலவுகள் | 10,000 | | |
| இயந்திரம் விற்றதில் நட்டம் | 8,000 | | |
| நிகர இலாபம் | 3,40,000 | | |
| | 6,98,000 | | 6,98,000 |

மேற்கண்ட விவரம் கொண்டு மொத்த இலாப விகிதம், நிகர இலாப விகிதம், இயக்க விகிதம், இயக்க இலாப விகிதம் காண்க.

56. பின்வரும் விவரங்களிலிருந்து 2011 ஜனவரி, பிப்ரவரி, மார்ச் மாதங்களுக்கான ரொக்கத் திட்டப்பட்டியல் தயாரிக்க.

| மாதம் | விற்பனை | கொள்முதல் | விற்பனை செலவுகள் |
|---|---|---|---|
| டிசம்பர் 2010 | 500000 | 400000 | 55000 |
| ஜனவரி 2011 | 600000 | 600000 | 65000 |
| பிப்ரவரி 2011 | 700000 | 400000 | 75000 |
| மார்ச் 2011 | 800000 | 500000 | 85000 |

1) அனைத்து விற்பனையும் ரொக்கத்திற்கு செய்யப்பட்டது.
2) சரக்களித்தோர் அனுமதித்த கடன் வசதி காலம் ஒரு மாதம்.
3) செலவுகள் ஒரு மாதம் கடந்து செலுத்தப்படுகிறது.
4) 1.1.2011–ல் தொடக்க ரொக்க இருப்பு ரூ.75000.
5) ரூ.2,00,000 மதிப்புள்ள சொத்து மார்ச் மாதம் வாங்கப்பட உள்ளது.

57. துளசி வரையறு நிறுமம் ஒவ்வொன்றும் ரூ.10 மதிப்புடைய 50000 பங்குகளை ரூ.2 முனைமத்தில் கீழ்கண்டவாறு வெளியிட்டது.
விண்ணபத்தின் போது ரூ.2 ஒதுக்கீட்டின் போது ரூ.5 (ரூ.2 முனைமம் உட்பட) முதல் அழைப்பின் போது ரூ.3
இறுதி அழைப்பின் போது ரூ.2
அந்நிறுமம் 70000 பங்கு விண்ணப்பங்கள் பெற்றது. அதில் மறுக்கப்பட்ட 20000 விண்ணப்பங்களின் மீதான தொகை திருப்பி செலுத்தப்பட்டது. இரு அழைப்புகளும் விடுக்கப்பட்டு பெற வேண்டிய முழுத் தொகையும் பெறப்பட்டது.
குறிப்பேட்டு பதிவுகள் தந்து, வங்கி க/கு, பங்கு முதல் கணக்கு, பத்திர முனைமக் கணக்கு மற்றும் இருப்பு நிலைக் குறிப்பு தயாரிக்க.